©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 22] CHENNAI, WEDNESDAY, MAY 31, 2017
Vaikasi 17, Hevilambi, Thiruvalluvar Aandu–2048

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

*Pages.*

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை – தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் வட்டத்திலுள்ள 12 வருவாய் கிராமங்களை பாலக்கோடு வட்டத்துடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது. 40-42

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2017 மே 31.*

No. II(1)/REV/17/2017.

**[ஆட்சி எல்லை – தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் வட்டத்திலுள்ள 12 வருவாய் கிராமங்களை பாலக்கோடு வட்டத்துடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–**

*[அரசாணை (நிலை) எண் 173, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 9 மே 2017.]*

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண். 74, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள் 10–02–2016.
2. மாவட்ட ஆட்சியர், தருமபுரி கடிதம் எண் ந.க. 10761/2013/அ5, நாள் 02–08–2016, 02–09–2016 மற்றும் 26–12–2016.
3. முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க.பணி.6(3)/32168/2016, நாள் 10–01–2017.

**ஆணை: எண் 173, வருவாய் [வ.நி. 1(1)]த் துறை, 9 மே 2017.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் அரூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து புதிய காரிமங்கலம் வட்டம் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. தருமபுரி மாவட்ட ஆட்சியர் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு மற்றும் அரூர் ஆகிய வட்டங்களை சீரமைத்து புதிய காரிமங்கலம் வட்டம் தோற்றுவிக்கப்பட்டது எனவும், வட்டப்பிரிவினைக்கு பின்பு காரிமங்கலம் வட்டத்திற்குட்பட்ட வெள்ளிசந்தை உள்வட்டத்தில் உள்ள 12 கிராமங்களில் எலுமிச்சனஅள்ளி தவிர மற்ற 11 கிராமங்களும், காரிமங்கலம் உள்வட்டத்தில் மொத்தம் உள்ள 15 கிராமங்களில் புலிக்கல் கிராமமும் வட்டத் தலைமையிடமான காரிமங்கலத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளதென்றும், எனவே, கீழ்காணும் 12 கிராமங்களையும் மீண்டும் பாலக்கோடு வட்டத்துடன் இணைத்திடுமாறு கிராம பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பினர் கோரிக்கைகள் வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

| *வ.எண்.* | *தற்போதுள்ள உள்வட்டத்தின் பெயர் (காரிமங்கலம் வட்டம்)* | *வட்டச் சீரமைப்பிற்கு பின்பு உள்ள உள்வட்டத்தின் பெயர் (பாலக்கோடு வட்டம்)* | *வருவாய் கிராமத்தின் எண்.* | *பாலக்கோடு வட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய வருவாய் கிராமத்தின் பெயர்* |
|---|---|---|---|---|
| 1 | காரிமங்கலம் உள்வட்டம் | பாலக்கோடு உள்வட்டம் | 30 | புலிக்கல் |
| 2 | வெள்ளிச்சந்தை உள்வட்டம் | வெள்ளிச்சந்தை உள்வட்டம் | 33 | அண்ணாமலைஅள்ளி |
| 3 | | | 85 | மகேந்திரமங்கலம் |
| 4 | | | 83 | ஜிட்டாண்டஅள்ளி |
| 5 | | | 84 | கிட்டனஅள்ளி |
| 6 | | | 88 | ஜக்கசமுத்திரம் |
| 7 | | | 87 | திம்மராயனஅள்ளி |
| 8 | | | 86 | மாரவாடி |
| 9 | | | 92 | முருக்கல்நத்தம் |
| 10 | | | 91 | பிக்கனஅள்ளி |
| 11 | | | 90 | கருக்கனஅள்ளி |
| 12 | | | 89 | வெலகலஅள்ளி |

3. மேலும், உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான சேவைகள் அனைத்தும் உள்ளூர் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் மூலம் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் ஒப்பந்ததாரர்கள் மூலமாகவும்,

துப்புரவு பணிகள் தூய்மை காவலர்கள் மூலமாகவும் அளிக்கப்படுகின்றன என்றும் எனவே, மேற்காணும் சேவைகளை பெற பொதுமக்கள் ஊராட்சி ஒன்றிய தலைமையிடத்திற்கு பயணிக்க வேண்டிய தேவைகள் மிகவும் குறைவு என்றும், அதேசமயம் வருவாய்த் துறையின் நலத்திட்ட உதவிகள் மற்றும் சேவைகள் பொதுமக்களின் அன்றாட வாழ்வியலில் தவிர்க்க முடியாததாகவும், இணையதளமூலம் பெறும் சான்றிதழ்கள் தவிர சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மற்றும் பிரதி வாரம் திங்கட்கிழமைதோறும் தங்கள் குறைகளை தெரிவிக்கவும் அனைத்து நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும் தலைமையிடத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது என்றும் தெரிவித்து 12 கிராமங்களை, பாலக்கோடு வட்டத்தில் இணைத்து மறுசீரமைப்பு செய்ய காரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய குழுவானது நிறைவேற்றி தந்துள்ள தீர்மானத்தின் அடிப்படையிலும் காரிமங்கலம் வருவாய் வட்டத்திலுள்ள 12 கிராமங்களை பாலக்கோடு வட்டத்துடன் இணைத்து மறுசீரமைப்பு செய்ய தருமபுரி மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார்.

**4.** தருமபுரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுகள் 02–01–2017 மற்றும் 03–01–2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற உயர்மட்டக்குழு கூட்டத்தின் முன் வைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 12 கிராமங்களை காரிமங்கலம் வட்டத்திலிருந்து பிரித்து பாலக்கோடு வட்டத்தில் சேர்த்த பின், அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 09–06–2003–இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோல்கள் இவ்விரு வட்டங்களுக்கும் பூர்த்தியாவதை குழு அறிந்தது எனவும், தருமபுரி மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள அறிக்கையினை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என உயர்மட்டக்குழுவால் முடிவு செய்யப்பட்டது.

**5.** காரிமங்கலம் வட்டத்திலிருந்து 12 கிராமங்களைப் பிரித்து பாலக்கோடு வட்டத்தில் சேர்ப்பதற்கான ஆட்சி எல்லை விவரப்பட்டியல் பின்வருமாறு:—

| *வ. எண்.* | *ஆட்சிஎல்லை விவரம்* | *தற்போதுள்ள காரிமங்கலம் வட்டம்* | *12 கிராமங்களைப் பிரித்தபின் உள்ள காரிமங்கலம் வட்டம்* | *12 கிராமங்களைப் சேர்த்தபின் உள்ள பாலக்கோடு வட்டம்* | *அரசாணை எண். 279, வருவாய்த் துறை, நாள் 09–06–2003ன் வலாசநபடி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | காரிமங்கலம் | காரிமங்கலம் | பாலக்கோடு | |
| 2 | பரப்பு (ச.கி.மீ) | 472 | 337 | 524.88<br>(389.88 + 135) | குறைந்த அளவு 250 ச.கி.மீ. அதிக அளவு 2000 ச.கி.மீ. |
| 3 | மக்கள் தொகை | 241350 | 198761 | 227730<br>(185141+42589) | குறைந்த அளவு 100000 அதிக அளவு 550000 |
| 4 | வருவாய் கோட்டம் | தருமபுரி | தருமபுரி | தருமபுரி | |
| 5 | சட்டமன்றத் தொகுதி | பாலக்கோடு | பாலக்கோடு | பாலக்கோடு | |
| 6 | பாராளுமன்றத்தொகுதி | தருமபுரி | தருமபுரி | தருமபுரி | |
| 7 | நகராட்சி | – | – | – | |
| 8 | ஊராட்சி ஒன்றியங்கள் | 1. காரிமங்கலம்<br>2 மொரப்பூர் (பகுதி) | 1. காரிமங்கலம்<br>2. மொரப்பூர் (பகுதி) | 1. பாலக்கோடு<br>2. காரிமங்கலம் (பகுதி) | 2 அல்லது 3 முழு ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9 | பேரூராட்சிகள் | 1. காரிமங்கலம்<br>2. கம்பைநல்லூர் | 1. காரிமங்கலம்<br>2. கம்பைநல்லூர் | 1. பாலக்கோடு | |
| 10 | உள்வட்டங்கள் | 1. காரிமங்கலம்<br>2. பெரியானஅள்ளி<br>3. கம்பைநல்லூர்<br>4. வெள்ளிச்சந்தை | 1. காரிமங்கலம்<br>2. பெரியானஅள்ளி<br>3. கம்பைநல்லூர் | 1. பாலக்கோடு<br>2. மாரண்டஅள்ளி<br>3. புலிக்கரை<br>4. வெள்ளிச்சந்தை | |

| *வ. எண்.* | *ஆட்சிஎல்லை விவரம்* | *தற்போதுள்ள காரிமங்கலம் வட்டம்* | *12 கிராமங்களைப் பிரித்தபின் உள்ள காரிமங்கலம் வட்டம்* | *12 கிராமங்களைப் சேர்த்தபின் உள்ள பாலக்கோடு வட்டம்* | *அரசாணை எண். 279, வருவாய்த் துறை, நாள் 09–06–2003–ன் வலாசநபடி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| 11 | வருவாய் கிராமங்கள் எண்ணிக்கை | 52 | 40 | 66 (54 + 12) | குறைந்த அளவு 30 வருவாய் கிராமங்கள் |
| 12 | ஊராட்சிகள் எண்ணிக்கை | 39 | 32 | 37 (30 + 7) | |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவில் உள்ள கிராமத்தின் பெயர் | திம்மராயனஅள்ளி 43 கி.மீ. | கே. அக்ரஹாரம் 27 கி.மீ. | திம்மராயனஅள்ளி 25 கி.மீ. | |

**6.** முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்மொழிவுகள் அடிப்படையிலும், அதன் மீதான வட்டங்களைப் பிரிப்பதற்கான உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும், காரிமங்கலம் வட்டத்திலிருந்து 12 கிராமங்களைப் பிரித்து பாலக்கோடு வட்டத்தில் சேர்ப்பதற்கான உரிய அரசாணை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**7.** மேற்கண்ட சூழ்நிலையில், முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டத்திலிருந்து பின்வரும் 12 கிராமங்களைப் பிரித்து பாலக்கோடு வட்டத்தில் சேர்த்து அரசு ஆணையிடுகிறது.

| *கிராம எண்.* | *கிராமத்தின் பெயர்* |
|---|---|
| 30 | புலிக்கல் |
| 33 | அண்ணாமலைஅள்ளி |
| 85 | மகேந்திரமங்கலம் |
| 83 | ஜிட்டாண்டஅள்ளி |
| 84 | கிட்டனஅள்ளி |
| 88 | ஜக்கசமுத்திரம் |
| 87 | திம்மராயனஅள்ளி |
| 86 | மாரவாடி |
| 92 | முருக்கல்நத்தம் |
| 91 | பிக்கனஅள்ளி |
| 90 | கருக்கனஅள்ளி |
| 89 | வெலகலஅள்ளி |

(ஆளுநரின் ஆணைப்படி)

**சந்தர மோகன். B,**
*அரசு செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.